**செ. கு. எண்: 13** **நாள்: 26.05.2021**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (26.5.2021) திருவள்ளூர் மாவட்டம், நேமம், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

---

நேற்று செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கும் HLL Biotech நிறுவனத்தின் தடுப்பூசி ஆய்வகத்தை ஆய்வு செய்தேன். இன்று காலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய oxygen plant அமைந்துள்ள ஐநாக்ஸ் (INOX) நிறுவனத்தை ஆய்வு செய்தேன். அதனைத் தொடர்ந்து Daimler India நிறுவனத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியை தொடங்கி வைத்தேன். இப்போது திருவள்ளூர் மாவட்டம், நேமம் கிராமத்தில், ஊரக பகுதிகளில் தடுப்பூசி போடக்கூடிய பணிகளை தொடங்கி வைத்தேன்.

கொரோனா தொற்றை நாம் வெல்ல வேண்டும் என்று சொன்னால், மக்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். அதற்கான விழிப்புணர்வை தமிழ்நாடு அரசு முனைப்பாக செய்து கொண்டிருக்கிறது. அனைவருக்கும் தடுப்பூசி கொடுக்கக்கூடிய பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அலுவலர்களையும், அதேபோல அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் நான் அறிவுறுத்தி கொண்டு இருக்கிறேன். அதன் அடிப்படையில் தான் நானே இன்று நேரடியாக இந்தப் பகுதிக்கு வந்து, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் தொடங்கி வைத்து இருக்கிறேன் என்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். கொரோனா தொற்றை பரவாமல் தடுப்பது, தொற்றால் பாதிக்கப்பட்டு இருப்பவர்களை காப்பது, இந்த இரண்டு இலக்கோடு தமிழக அரசு முழு மூச்சோடு செயல்பட்டு வருகிறது. தொற்றை தடுப்பதற்கு அந்நோய் பரவக்கூடிய சங்கிலியை நாம் உடைத்தாக வேண்டும். இதற்காகத் தான் முழு ஊரடங்கு போடப்பட்டு இருக்கிறது. இந்த முழு ஊரடங்கை எந்த தளர்வும் இல்லாமல் போட்ட காரணத்தினால் தான் இந்த இரண்டு நாட்களாக நீங்களும் பார்த்திருப்பீர்கள் ஒரு சில பயன் இன்றைக்கு வந்து கொண்டு

இருக்கிறது. அதை நம்முடைய மருத்துவ வல்லுநர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

சென்னை உள்ளிட்ட நகரங்களில் கொரோனா தொற்று பரவல் படிப்படியாக குறைந்து வந்து கொண்டு இருக்கிறது. இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் இது முழு பலனை தரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்திருக்கிறது. மக்கள் அனைவரும் முழு ஊரடங்கு கட்டுப்பாடுகளை முழுமையாக கடைப்பிடித்து வீட்டிலேயே இருக்க வேண்டும். அவசியம் இல்லாமல் வெளியே வரக்கூடாது என்று உங்களை எல்லாம் நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றுவதற்காக ஏராளமான மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளை நம்முடைய தமிழ்நாடு அரசு செய்து இருக்கிறது, தொடர்ந்து செய்து கொண்டு வருகிறது.

புதிய படுக்கை வசதிகளை உருவாக்கி இருக்கிறோம். ஆக்ஸிஜன் தட்டுப்பாடு இல்லாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி வந்திருக்கிறோம். போதுமான அளவு படுக்கைகள் இப்போது தயார் நிலையில் இருக்கிறது. ஆக்ஸிஜன் வசதிகளும் போதுமான அளவு இருக்கிறது என்ற நிலைமையை அரசு உருவாக்கி இருக்கிறது. எத்தகைய சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளக் கூடிய நிலையில் இன்றைய அரசு இயங்கிக் கொண்டு இருக்கிறது என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாக தெரியும். இந்த கொரோனாவிலிருந்து மக்களை காப்பதில் மிக மிக முக்கியம் தடுப்பூசி தான். இது தான் மிக மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. 16.1.2021 அன்று தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை இல்லாத அளவிற்கு நேற்றைக்கு மட்டும் 2,24,544 பேர் தடுப்பூசி போடப்பட்டு இருக்கிறது. தடுப்பூசி போடப்படும் பணி தொடங்கிய நாள் முதல் மே 7 வரை சராசரியாக ஒரு நாளைக்கு 61,000 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, சராசரியாக ஒரு நாளைக்கு 78,000 தடுப்பூசிகள் போடப்பட்டு வந்திருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு சராசரியாக 6 விழுக்காடு அளவில் இருந்த தடுப்பூசி வீணடிப்பு (wastage) கடந்த இரண்டு வாரங்களில் ஒரு விழுக்காடாக குறைத்திருக்கிறோம். 44 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஒன்றிய அரசு வழங்கி வரும் தடுப்பூசிகளில் தற்போது 3 லட்சத்து 14 ஆயிரம் தடுப்பூசிகள் கையிருப்பு இருக்கிறது. எனவே, தமிழ்நாட்டின் தடுப்பூசி ஒதுக்கீட்டை உயர்த்த வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து ஒன்றிய அரசை வலியுறுத்தி கொண்டு இருக்கிறோம்.

18 வயதிலிருந்து 44 வயதுக்குள் இருக்கிறவர்களுக்கு தமிழ்நாடு அரசு வாங்கக்கூடிய தடுப்பூசிகளை பொறுத்தவரைக்கும் ஏற்கனவே பெறப்பட்டுள்ள 12.85 லட்சம் தடுப்பூசிகளையும், அடுத்து பெறவுள்ள 11.50 லட்சம் தடுப்பூசிகளையும் முழுமையாக பயன்படுத்தி தொற்று அபாயம் அதிகமாக உள்ளவர்களுக்கும், பெரிய தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் தடுப்பூசி போடுவதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்று கொண்டிருக்கிறது.

ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனைகளை பொறுத்தவரைக்கும் தற்போது தமிழ்நாட்டில் 267 பரிசோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகளில் உள்ள பரிசோதனை மையங்களில் பரிசோதனை திறனை உயர்த்துவதற்கு தேவையான கருவிகள் கூடுதலாக வாங்கப்பட்டு பரிசோதனை எண்ணிக்கை பெருமளவு உயர்த்தப்பட்டு இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு இருந்த ஒரு மாத காலத்தில், அதாவது ஏப்ரல் 8 முதல் மே 7 வரை சராசரியாக 1.15 லட்சம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை நாள் ஒன்றுக்கு சராசரியாக 1.64 லட்சம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது நாள்தோறும் சுமார் 50,000 பரிசோதனைகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த காலக்கட்டத்தில் நாள்தோறும் நமது நாட்டிலேயே அதிகபட்ச அளவில் ஆர்டிபிசிஆர் பரிசோதனைகளை தமிழ்நாடு தான் அதிக அளவு மேற்கொண்டு

வருகிறது. தடுப்பூசி போட்டுக் கொள்ள முன்வர வேண்டும் என்று உங்கள் மூலமாக மக்களை எல்லாம் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். தடுப்பூசி தான் இன்றைக்கு நமது காவல்காரனாக விளங்கி கொண்டு இருக்கிறது. தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு மக்கள் எந்த காரணத்தைக் கொண்டும் தயங்க வேண்டாம். நானே தடுப்பூசி போட்டுக் கொண்டேன். தடுப்பூசி போட்டுக் கொள்வதால் என்ன பயன் என்று கேட்டீர்கள் என்றால் ஒருவேளை கொரோனா தொற்று தாக்கினாலும் அதனால் ஒரு பெரிய பாதிப்பு ஏற்பட நிச்சயம் வாய்ப்பில்லை. நிச்சயமாக இருக்காது. எளிதாக தொற்றை வெல்லலாம் என்று மருத்துவ நிபுணர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதனால் பொதுமக்கள் தானாக முன்வந்து தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி, வற்புறுத்தி, கெஞ்சி கேட்டுக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழகத்திற்கு போதுமான அளவிற்கு ஒன்றிய அரசு தடுப்பூசியை வழங்கி இருக்கிறதா என்று கேட்டால், தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவில் பல்வேறு மாநிலங்களும் இதே நெருக்கடியை தான் இன்றைக்கு எதிர்கொண்டு இருக்கிறது. இந்த நெருக்கடியை சமாளிப்பதற்காகத் தான் தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் நாம் ஏற்கனவே குளோபல் டெண்டர் உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகளை வெளியிட்டு இருக்கிறோம். நேரடியாக தடுப்பூசியை வாங்க இருக்கிறோம். அதேபோல தமிழ்நாட்டிலேயே தடுப்பூசியை தயாரிக்கவும் திட்டமிட்டு இருக்கிறோம்.

அதனால் தான் நேற்றையதினம் செங்கல்பட்டு இருக்கக்கூடிய ஒன்றிய அரசின் நிறுவனத்திற்கு நேரடியாக நானே சென்று பார்வையிட்டேன். அங்கே உருவாக்கப்பட்டு இருக்கக்கூடிய தொழிற்சாலை என்ன நிலையில் இருக்கிறது என்று பார்த்தீர்கள் என்றால் முடக்கி வைக்கப்பட்டு இருக்கிறது. அதை செயல்படுத்த அனைத்து ஏற்பாடுகளையும் தமிழக அரசு செய்ய இருக்கிறது. அதற்கான ஆலோசனைகளை நாங்கள் தொடர்ந்து செய்து, ஒன்றிய அரசை நாங்கள் வலியுறுத்த இருக்கிறோம். தமிழக மக்கள் அனைவருக்கும் தேவையான

அளவிற்கு தடுப்பூசி இன்னும் சில மாதங்களில் பெற்றவுடன் தடுப்பூசி போடுவதை ஒரு மக்கள் இயக்கமாகவே, ஒரு மாபெரும் இயக்கமாகவே நடத்துவதற்கு திட்டமிட்டு இருக்கிறோம். அப்பொழுது அனைவரும் முன்வந்து தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

முதல் அலையை பொறுத்தவரைக்கும் முற்றிலுமாக அதை தடுத்து முற்றுப்புள்ளி வைக்காததன் விளைவு தான் இந்த இரண்டாவது அலை ஏற்படுவதற்கு காரணமாக இருக்கிறது. இந்த இரண்டாவது அலையை நாம் முற்றிலுமாக ஒழித்து அதிலே வெற்றி காண்போம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பத்திரிகையாளர்களின் மூலமாக மக்களுக்கு தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கேள்வி – கோயம்புத்தூர் போன்ற மேற்கு மாவட்டங்களில் கொரோனா தொற்று அதிகரித்து வருவது குறித்து......

பதில் – மேற்கு மாவட்டங்களில் கொஞ்சம் அதிகரித்து இருக்கிறது. உண்மைதான், நான் மறுக்கவில்லை. சென்னை தான் முதலிடத்தில் இருந்தது, கோவை இரண்டாவது இடத்தில் இருந்தது. இப்போது சென்னையை பொறுத்தவரைக்கும் படிப்படியாக குறைந்து வந்து கொண்டிருப்பதை நீங்களே நேரடியாக பார்க்கிறீர்கள். கோவையை பொறுத்தவரைக்கும் குறைப்பதற்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டு இருக்கிறோம். தடுப்பதற்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டு இருக்கிறோம். அதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று கொண்டு இருக்கிறது.

கேள்வி – திருவள்ளூர் மாவட்டத்தில் ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கை வசதிகள் குறைவாக இருப்பதாக வரும் செய்திகள் குறித்து...

பதில் – ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்பு – ஆட்சி பொறுப்பேற்ற நேரத்தில் அந்த சூழ்நிலை இருந்தது. உண்மைதான் அதை மறுக்கவில்லை. அது இப்போது சரிசெய்யப்பட்டு இருக்கிறது. இப்போது எங்கும் ஆக்ஸிஜன் தட்டுப்பாடு இல்லை என்ற நிலை தான் இருக்கிறது. ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் இல்லை என்று சொன்னீர்கள் என்றால் நான் உடனடியாக நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறேன்.

கேள்வி – தமிழகத்தில் நீட் தேர்வு நடத்த வாய்ப்பு இருக்கிறதா....

பதில் – நாங்கள் ஏற்கனவே என்னென்ன தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தோமோ அதை எல்லாம் நிறைவேற்றுகின்ற முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். கொரோனா தொற்று மிகவும் அதிகமாக பரவி வருவதால் அந்தப் பணிகளில் முதலில் ஈடுபட்டு இருக்கிறோம். இதற்கு எல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நீங்கள் சொன்னது போல் அந்தப் பணிகளை எல்லாம் விரைவிலே செய்வோம்.

கேள்வி – ஊரடங்கு மேலும் நீட்டிக்கப்படுமா....

பதில் – இந்த ஒரு வாரத்திற்கு எந்த தளர்வும் இல்லாமல் ஊரடங்கு போடப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே எல்லா கட்சி தலைவர்களையும் அழைத்து ஆலோசனை செய்த போது, முதலில் ஒருவார காலம் ஊரடங்கை போடுவோம், தேவைப்பட்டால் இரண்டாவது வாரமும் அதை நீடிப்பது குறித்து ஆலோசனை செய்து முடிவெடுக்கலாம் என்று முடிவு எடுத்து இருக்கிறோம். இப்போது உள்ள நிலை ஓரளவுக்கு திருப்தியாக இருக்கிறது. இன்னும் முழு திருப்தி வரவில்லை. வந்த பிறகு அதை குறித்து யோசித்து முடிவு எடுப்போம்.

கேள்வி – திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அம்மா உணவகங்கள் முறையாக செயல்படவில்லை என்றும், உணவு தயாரித்து நோயாளிகளுக்கு வழங்காமல் இருக்கிறது என்ற குற்றச்சாட்டு குறித்து....

பதில் – எந்த குற்றச்சாட்டு இருந்தாலும் அதை உடனடியாக பரிசீலித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை நிச்சயம் எடுக்கும். இந்த ஆட்சியை பொறுத்தவரைக்கும் அரசியல் நோக்கத்தோடு எதையும் அணுகமாட்டோம். மக்கள் நலனை அடிப்படையாக வைத்து தான் அணுகுவோம் என்பதை உறுதியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**